எம்.சி.ஓ.பி.218/2017 ம.சா.1 (மூக்கன்) 28.08.2019

கு.வி.

நான் இருசக்கர வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரியல்ல. இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுனர் உரிமம் இல்லை. நான் ஓட்டிச்சென்ற வண்டிக்கு காப்பீடு உள்ளது. என்னுடைய இருசக்கர வாகனத்தின் காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று வழுக்கி விழுந்து கீழே விழுந்துவிட்டேன் என்றும், 2ம் எதிர்மனுதாரர் தான் என்னை தூக்கிவிட்டார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் தான் என்னை 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனையில் சேர்த்தார் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இடிக்கவில்லை என்று குற்ற வழக்கில் விடுதலை செய்யப்பட்டார் என்றால் சரிதான். விபத்தே நடக்கவில்லை என்றும், கீழே விழந்த காயத்திற்காக பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. காப்பீட்டு நிறுவனத்தை இந்த வழக்கில் சேர்க்காததால் வழக்கு பாதிக்ப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவசெலவு ரூ.1,00,000/-ம் செலவானதற்கு எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. மாதம் ரூ.25,000/-ம் வருமானம் ஈட்டுவதற்கு எந்த வித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக பொய்யாக தயார் செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒம்/மூக்கன்,

ஒம்/C.ஸ்ரீதர்,

சார்பு நீதிபதி,

குளித்தலை.